# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.

| | | | |
|---|---|---|---|
| Sessions Case No. | : | 17/2021 | |
| | : | Prosecution - | **PW-17** |
| Deposition of witness for | : | Defense | |

| | | | |
|---|---|---|---|
| Name | : பிரகாஷ் | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1872 of the 01st day of August 2023.

**(**குற்ற இறுதியறிக்கையில் உள்ள வரிசைப்படி எதிரிகள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளனர்**. 1** ம் எதிரி கோகுலகிருஷ்ணன் **(**எ**)** கோகுல்**, 2** ம் எதிரி துரைப்பாண்டி **(**எ**)** பாண்டி**, 4** ம் எதிரி மணிகண்டன் **(**எ**) R.S.**மணி**, 5** ம் எதிரி ரமேஷ் **(**எ**)** காவியாரமேஷ்**, 6** ம் எதிரி கேசவன்**, 7** ம் எதிரி அரவிந்த்குமார் **(**எ**)** அரவிந்த்**, 8** ம் எதிரி தமிழரசன்**, 9** ம் எதிரி அஜீத்**, 10** ம் எதிரி செந்தில் **(**எ**)** செந்தில்ஈஸ்வரன்**, 11** ம் எதிரி கலைச்செல்வன்**, 12** ம் எதிரி விமல் பஷீர் ஆகியோர் முன்னிலையாகியுள்ளனர்**. 3** ம் எதிரி இவ்வழக்கிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு**,** அவருக்கு எதிரான சிறப்பு வழக்கு **SPL.SC. 11/2023** நிலுவையில் இருந்து வருகிறது**)**

முதல் விசாரணை

நான் தற்போது கரூர், தாந்தோணிமலை கிராமத்தில், கிராம நிர்வாக அதிகாரியாக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 22.09.2020 அன்று இதே வட்டம், இலட்சுமிநாராயணசமுத்திரம் கிராம நிர்வாக அதிகாரியாக பணிபுரிந்து வந்தேன். அப்போது எனது கிராம உதவியாளராக திருமதி.சுலோச்சனா பணியாற்றினார். 22.09.2020 அன்று நான் பணியிலிருந்தபோது, கரூர் நகர காவல் ஆய்வாளர், கு.எண். 1031/2020 வழக்கு சம்மந்தமாக எதிரி தமிழரசன் என்பவர் ஒப்புதல் வாக்குமூலம் அளிக்க

தயாராக இருப்பதாகவும், சாட்சியாக இருப்பதற்கு எங்களை அழைத்தார். அதன்பேரில் நாங்கள் கரூர் நகர காவல்நிலையத்திற்கு சென்றோம். அங்கு காலை 7.30 மணிக்கு எங்கள் முன்னிலையில் எதிரி தமிழரசன் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை போலீசார் காவல்நிலைய கணிணியில் தட்டச்சு செய்தனர். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை பிரிண்ட் எடுத்து தமிழரசனிடம் கையெழுத்து வாங்கினார்கள். அதில் நானும், கிராம உதவியாளரும் கையெழுத்து போட்டோம். ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.8. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின்படி, காவல் ஆய்வாளர், நான், கிராம உதவியாளர் ஆகியோரை எதிரி தமிழரசன் அரவக்குறிச்சி சௌந்தாராபுரத்துக்கு அழைத்துச்சென்று, அவரது வீட்டின் முன்னால் இருந்த ஹீரோஹோண்டா வண்டியை அடையாளம் காட்டினார். போலீசார் அந்த வாகனத்தை காலை 9.30 மணிக்கு கைப்பற்றி, மகஜர் தயாரித்தனர். அதில் நாங்கள் கையெழுத்து செய்தோம். அந்த வாகனத்தின் பதிவு எண். TN 38 AE 4282 ஆகும். நீதிமன்ற வராண்டாவிலுள்ள வாகனத்தைதான் போலீசார் கைப்பற்றினர். அந்த வண்டி ஏற்கனவே குறியீடு செய்யப்பட்ட சா.பொ.3 ஆகும். கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.9. இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார். பின்னர் என்னை DSP விசாரித்தார்.

03.10.2020 அன்று மேலும் இதே வழக்கில் தொடர்புடைய மேலும் இரண்டு நபர்கள் ஒப்புதல் வாக்குமூலம் அளிக்க தயாராக உள்ளனர் என்றும், காவல்நிலையத்திற்கு வருமாறு வட்டாட்சியருக்கு தகவல் கொடுத்து, வட்டாட்சியர் என்னையும், உதவியாளரையும் காவல்நிலையம் செல்லுமாறு கூறினார். அன்றைய தினம் காலை 11.15 மணிக்கு காவல்நிலையம் சென்றோம். அங்கு எதிரி பிரேம் (எ) பிரேம்குமார் என்பவர் DSP யிடம் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை கணிணியில் தட்டச்சு செய்து, பிரிண்ட் எடுத்து கொடுத்தார்கள். அதில் எதிரி பிரேம்குமார் கையெழுத்திட்டார். நானும், கிராம உதவியாளரும் அதில் கையெழுத்து செய்தோம். பின்னர் காவல்நிலைய வளாகத்தில் இருந்த TN 63 AW 6699 என்ற யானை கலரில் இருந்த வெர்னா காரை போலீசார் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார்கள். அந்த மகஜரில் நானும், என் உதவியாளரும் கையொப்பம் செய்தோம். அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.10. அந்த கார் நீதிமன்ற வளாகத்திலுள்ள கார் ஆகும். அது சா.பொ.6. இது சம்மந்தமாக DSP என்னை விசாரித்தார்.

<u>**1** மற்றும் **4** எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

என்னுடைய நேரடி உயரதிகாரி கரூர் வட்டாட்சியர். கிராம நிர்வாக அதிகாரிக்கு தனியாக அலுவலகம் உள்ளது. நான் வழக்கமாக 9.45 மணிக்கு அலுவலகம் திறப்பேன். பணி அதிகம் இருக்கும்போது காலை 6.00 மணிக்கே அலுவலகத்திற்கு செல்வேன். நான் எந்தெந்த தேதியில் எத்தனை மணிக்கு அலுவலகத்தை திறப்பேன் என்பதற்கு ஆவணங்கள் கிடையாது. எனது வீடு, எனது அலுவலகத்திலிருந்து மூன்று கி.மீ. தூரத்தில் உள்ளது. எனது உதவியாளர் வீடு அலுவலகத்திலிருந்து இரண்டு கி.மீ. தூரத்தில் உள்ளது. அலுவலகத்திற்கு மறுநாள் சீக்கிரம் வருவது குறித்து, முந்தையநாளே நாங்கள் முடிவு செய்வோம். சிலநாள் முந்தைய தினமே பேசிக்கொள்வோம், சிலநாள் பேசிக்கொள்ள முடியாது. செப்டம்பர் 2020 ல் கொரோனா பொதுமுடக்கம் இருந்தது. அதன்காரணமாக வேறு அவசர பணிகளும் இருந்தது. என்னுடைய அலுவலகத்தில் இணையதள வசதி உள்ளது. எனது வீட்டிலும் இணையதள வசதியுள்ளது. அதிகாலை நேரத்தில் அலுவலகத்திற்கு பொதுமக்கள் வரமாட்டார்கள். அலுவலகத்திலுள்ள சான்றிதழ்கள் எடுத்துக்கொண்டு சம்மந்தப்பட்ட பகுதிக்கு செல்வோம். மேற்சொன்ன தேதியன்று நான் எந்த பகுதிக்கு சென்றேன் என்று என்னிடம் குறிப்பு இல்லை. காமராஜநகர் பகுதிக்கு சென்றேன். நான் காவல்நிலையத்திற்கு செல்வதற்கு முன்பு எதிரி தமிழரசன் எவ்வளவு நேரம் காவல்நிலையத்தில் இருந்தார் என்பது எனக்கு தெரியாது. 03.10.2020 அன்று எதிரி பிரேம்குமார் நான் காவல்நிலையத்திற்கு செல்வதற்கு முன்பு எவ்வளவு நேரமாக இருந்தார் என்று எனக்கு தெரியாது. வெர்னா கார் காவல்நிலையத்தில் நின்றுக்கொண்டிருந்தது. ஆய்வாளர் சொல்ல சொல்ல நளினி என்ற காவலர் தட்டச்சு செய்தார். எதிரி கொடுத்த வாக்குமூலத்தை ஆய்வாளர் சொல்ல சொல்ல காவலர் நளினி தட்டச்சு செய்தார். எதிரி சொன்னதற்கும், ஆய்வாளர் சொன்னதற்கும் என்ன வித்தியாசம் இருந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் எதிரி சொன்னதை ஆய்வாளர் சொன்னார். நான் சொன்னபடி, சொன்னவிதத்தில், எதிரிகள் தானாக முன்வந்து எந்த வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. காவல்நிலையத்தில் வைத்து ஒப்புதல் வாக்குமூலம் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரி தமிழரசனை எங்கு, எப்போது கைது செய்தார் என ஆய்வாளரிடம் கேட்டேன். கரூர் பஸ்டாண்டில் மதுரை பஸ் ஏறும் இடத்தில் 20.09.2020 அன்று கைது செய்ததாக கூறினார். அந்த காலக்கட்டத்தில் கொரோனா பொதுமுடக்கம் இருந்தது என்றால் தளர்வுகளுடன் இருந்தது. பஸ்டாண்டில் கைது செய்த நபரை, என்ன …..

காரணத்திற்காக காவல்நிலையத்தில் வைத்து வாக்குமூலம் வாங்குகிறீர்கள் என நான் ஆய்வாளரிடம் கேட்டேன். சாட்சிகளை வரவழைப்பதற்கும், எதிரிகளை பாதுகாப்பதற்காகவும், சாட்சி உண்மையாக இருக்க வேண்டும் என்பதற்காகவும் காவல்நிலையத்தில் வைத்து விசாரிப்பதாக ஆய்வாளர் சொன்னார். நான் இவ்வழக்கிற்கு முன்பு வேறு எந்த வழக்கிலும் ஒப்புதல் வாக்குமூல சாட்சியாக இருக்கவில்லை. இவ்வழக்கில் சாட்சி வேண்டுமென ஜோடிப்பதற்காக காவல்நிலையத்தில் வைத்து எதிரிகளை ஆய்வாளர் விசாரித்தார் என கூறுகிறேன் என்றால் சரியல்ல. பொதுமுடக்கம் இருந்ததால் எத்தனை மணிக்கு, எந்த ஊருக்கு எந்த பேருந்து சென்றது என்பதற்கு புள்ளிவிவரம் எதுவும் இல்லை. எதிரி தமிழரசனை கரூர் பேருந்து நிலையத்தில் வைத்து ஆய்வாளர் கைது செய்தார் என்பது தவறு என்றும், அவரை இரண்டு நாட்களுக்கு முன்பே கைது செய்து, காவல்நிலையத்தில் வைக்கப்பட்டார் என்றும் சொன்னால் சரியல்ல. நான் சொன்னபடி, சொன்னவிதத்தில், சொன்ன இடத்தில், எதிரிகளின் ஒப்புதல் வாக்குமூலங்களின்படி எந்த பொருளும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. நான் வருவாய்துறையில் பணிபுரிவதால், போலீசார் உதவி தேவை என்பதால், போலீசார் சொல்லிக்கொடுத்தபடி, உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.ஆ.8 ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதியில், வழக்குச்சொத்து எங்கு மறைத்து வைக்கப்பட்டது என கூறப்படவில்லை என்றால் சரிதான்.

<u>**2, 6, 8, 9** மற்றும் **12** ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எனது அன்றாட அலுவல் பணிகளை டைரியில் குறித்து வைப்பேன் என்றால் இல்லை. கிராம நிர்வாக அதிகாரி நாட்குறிப்பேட்டில் பதிவு செய்யும் வழக்கம் கிடையாது. என்னுடைய கிராம எல்லையை விட்டு, அயல்பணிக்கு செல்லும்போது உயரதிகாரிக்கு தகவல் சொல்ல வேண்டும். 22 ம் தேதி வட்டாட்சியருக்கு தகவல் தெரிவித்துவிட்டுதான் காவல்நிலையத்திற்கு சென்றேன். இலட்சுமிநாராயணசமுத்திரம் கிராமத்திலிருந்து தெற்காக மதுரை ரோட்டில் 30 கி.மீ. தூரத்தில் சௌந்தராபுரம் உள்ளது. அரவக்குறிச்சியிலிருந்து 3 கி.மீ. தூரத்தில் உள்ளது. சௌந்தராபுரம் வேலம்பாடி கிராம எல்லைக்குள் உள்ளது. அரவக்குறிச்சி - பள்ளப்பட்டி ரோட்டில் தெற்காக 3 கி.மீ. சென்று, அந்த ரோட்டில் மேற்காக 1 கி.மீ. செல்ல வேண்டும். தென்வடல் சாலையிலிருந்து கிழமேல் சாலையில் செல்ல வேண்டும். அந்த கிராமத்தில் எத்தனை வீதிகள் உள்ளன ...

என்று தெரியாது. பள்ளிக்கூடத்திற்கு அருகிலுள்ள வீதியில் உள்ள வீட்டிலிருந்து வண்டியை ஆய்வாளர் கைப்பற்றினார். பள்ளிக்கூடத்திலிருந்து 50 மீட்டர் தூரத்தில் அந்த வீடு உள்ளது. அந்த வீடு வடக்கு நோக்கி உள்ளது. அந்த பள்ளி துவக்கப்பள்ளி போன்று சிறிய பள்ளியாக இருந்தது. சௌந்தராபுரத்தில் மூன்று வீதிகள் உள்ளது என்றும், துவக்கப்பள்ளி எதுவும் கிடையாது என்றும் சொன்னால் சரியல்ல. எதிரி தமிழரசன் வீட்டிற்கு மேல்பக்கம் காலியிடம் உள்ளது. கிழக்கு பக்கம் கிழக்கு பார்த்த ஒரு வீடு உள்ளது. எதிரி தமிழரசன் வீட்டிற்கு அருகில் வேறு வீடுகள் எதுவும் கிடையாது என்றும், அவர் வீடு தெற்கு பார்த்து உள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில், எதிரி என் முன்னிலையில் வாக்குமூலம் எதுவும் அளிக்கவில்லை என்றும், அதனடிப்படையில் சான்றுபொருட்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. போலீசார் என்னிடம் எதிரியை கைது செய்திருக்கிறோம் என்று சொன்னார்கள். காவல்நிலையத்திலிருந்தா அல்லது எதிரியை கைது செய்த இடத்திலிருந்து அழைத்தார்களா என்று எனக்கு தெரியாது. எதிரி வண்டியை ஒப்படைத்த வீட்டின் உரிமையாளர் யாரென்று எனக்கு தெரியாது. இருசக்கர வாகனத்தை கைப்பற்றியபோது, வாகனத்தின் பதிவுச்சான்றிதழை கைப்பற்றவில்லை என்றால் எனக்கு சரியாக ஞாபகமில்லை.

எதிரி பிரேம்குமாரை 03.10.2020 க்கு 10-12 நாட்களுக்கு முன்பே பிடித்து காவல்நிலையத்தில் வைத்திருந்தார்கள் என்றும், அதனால்தான் எதிரியை கைது செய்த இடத்திலேயே வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. எதிரிகள் தமிழரசன் மற்றும் பிரேம்குமார் ஆகியோர் எனது முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலங்கள் எதுவும் அளிக்கவில்லை என்றும், அதனடிப்படையில் சான்று பொருட்கள் எதுவும் கைப்பற்றவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் அரசு ஊழியர் என்பதால் போலீசார் உதவி தேவைப்படும் என்பதால் போலீசாருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**5** ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

இல்லை என கற்றறிந்த வழக்கறிஞர் தெரிவித்தார்.

<u>**7** ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

03.10.2020 ம் தேதி நான் காவல்நிலையத்திற்கு செல்வதற்கு முன்பே சா.பொ.6 கார் இருந்தது. அந்த கார் காவல்நிலையத்திற்கு எப்போது வந்தது என்று எனக்கு தெரியாது. நான் சொன்னபடி, சொன்னவிதத்தில், சொன்ன தேதியில், சா.பொ.6 காரை போலீசார் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல.

<u>**10** மற்றும் **11** ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

மேற்படி குறுக்குவிசாரணையை ஏற்றுக்கொள்வதாக கற்றறிந்த வழக்கறிஞர்கள் தெரிவித்தார்கள்.

<u>மறு விசாரணை</u>

இல்லை.

ஒம்/.ஆர்.சுண்முகசுந்தரம்,
மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | | |
|---|---|---|---|
| Sessions Case No. | : | 17/2021 | |
| | : | Prosecution - | **PW-18** |
| Deposition of witness for | : | Defense | |

| | | | |
|---|---|---|---|
| Name | : அங்குராஜ் | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1872 of the 01st day of August 2023.

**(**குற்ற இறுதியறிக்கையில் உள்ள வரிசைப்படி எதிரிகள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளனர்**. 1** ம் எதிரி கோகுலகிருஷ்ணன் **(**எ**)** கோகுல்**, 2** ம் எதிரி துரைப்பாண்டி **(**எ**)** பாண்டி**, 4** ம் எதிரி மணிகண்டன் **(**எ**) R.S.**மணி**, 5** ம் எதிரி ரமேஷ் **(**எ**)** காவியாரமேஷ்**, 6** ம் எதிரி கேசவன்**, 7** ம் எதிரி அரவிந்த்குமார் **(**எ**)** அரவிந்த்**, 8** ம் எதிரி தமிழரசன்**, 9** ம் எதிரி அஜீத்**, 10** ம் எதிரி செந்தில் **(**எ**)** செந்தில்ஈஸ்வரன்**, 11** ம் எதிரி கலைச்செல்வன்**, 12** ம் எதிரி விமல் பஷீர் ஆகியோர் முன்னிலையாகியுள்ளனர்**. 3** ம் எதிரி இவ்வழக்கிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு**,** அவருக்கு எதிரான சிறப்பு வழக்கு **SPL.SC. 11/2023** நிலுவையில் இருந்து வருகிறது**)**

முதல் விசாரணை

நான் தற்போது அச்சமாபுரம் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிகிறேன். நான் கடந்த 29.09.2020 அன்று கரூர் வட்டம், கரூர் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தேன். அப்போது கிராம உதவியாளராக சாட்சி சுரேஷ்குமார் பணிபுரிந்தார். அன்றைய தினம் மாலை 6.00 மணிக்கு கரூர் நகர காவல் ஆய்வாளர் எங்களை அழைத்தார். நாங்கள் இருவரும் கரூர் நகர காவல்நிலையத்திற்கு சென்றோம். அங்கு அன்று இரவு 7.00 மணிக்கு எதிரி கோகுல் (எ) கோகுலகிருஷ்ணனை ……

விசாரித்தார்கள். அப்போது எதிரி கோகுல் (எ) கோகுலகிருஷ்ணன் எந்தவித துன்புறுத்தலுமின்றி ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை ஆய்வாளர் சொல்ல சொல்ல தட்டச்சு செய்தனர். பின்னர் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரியிடமும், என்னிடமும், என்னுடைய உதவியாளரிடமும் கையெழுத்து வாங்கினார்கள். ஒப்புதல் வாக்குமூலம் அளித்த கோகுல் (எ) கோகுலகிருஷ்ணன் நீதிமன்ற ஆஜரில் 1 வது நபராக உள்ள 1 வது எதிரி ஆவார். பின்னர் அதே தேதியில் 9.30 மணிக்கு பாண்டி (எ) துரைப்பாண்டியும் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். அப்போது நானும், என் உதவியாளரும் உடனிருந்தோம். அதை ஆய்வாளர் சொல்லி, தட்டச்சு செய்தனர். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், என் உதவியாளரும் கையொப்பம் செய்தோம். எதிரி துரைப்பாண்டி கையெழுத்திட்டார். ஆய்வாளர் கையெழுத்திட்டார். அன்று இரவாகிவிட்டதால், மறுநாள் 30.09.2020 அன்று மணி (எ) மணிகண்டணிடம் ஒப்புதல் வாக்குமூலம் வாங்கினர். அவர் சொல்ல சொல்ல ஆய்வாளர் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டது. அதில் நானும், என் கிராம உதவியாளரும் கையெழுத்து செய்தோம். எதிரி கையெழுத்து செய்தார். நீதிமன்ற ஆஜரில் இடமிருந்து வலமாக 2 வதாக உள்ள நபர் பாண்டி (எ) துரைப்பாண்டி. நீதிமன்ற ஆஜரில் 3 வது நபர் மணிகண்டன். (நீதிமன்ற ஆஜரில் *2* மற்றும் *3* வதாக உள்ள நபர்கள் *2* மற்றும் *3* எதிரிகள்*)*. எதிரிகள் அளித்த ஒப்புதல் வாக்குமூலங்களின் அடிப்படையில், ஆய்வாளர் எங்களை அழைத்துக்கொண்டு, கரூர் - அரவக்குறிச்சி ரோட்டிலுள்ள ஒத்தப்பாளையம் பிரிவிற்கு வடக்கே வேலமரத்தின் முட்புதர் அடியிலிருந்து எதிரி கோகுல் (எ) கோகுலகிருஷ்ணன் ஒரு அருவாளை எடுத்து ஆஜர் செய்தார். அதில் இரத்தக்கறை படிந்திருந்தது. அந்த அருவாள் நீதிமன்றத்திலுள்ள அருவாளாகும். அது ஏற்கனவே சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. ஆய்வாளர் மகஜர் தயாரித்து, அருவாளை கைப்பற்றினார். அந்த மகஜரில் நாங்கள் கையெழுத்து செய்தோம்.

எதிரி கோகுல் (எ) கோகுலகிருஷ்ணன் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.11. கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.12.

பின்னர் 10.15 மணிக்கு அதே இடத்திலிருந்து துரைப்பாண்டி ஒரு அருவாள் எடுத்து ஆஜர் செய்தார். அதை ஆய்வாளர் மகஜரில் கைப்பற்றினார். அந்த மகஜரில் நானும், என் உதவியாளரும் கையொப்பம் செய்தோம். அந்த அருவாள் நீதிமன்றத்திலுள்ள சா.பொ.2 ஆகும். எதிரி பாண்டி (எ) துரைப்பாண்டி அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.13. கைப்பற்றதல் மகஜர் அ.சா.ஆ.14.

பின்னர் பள்ளப்பட்டி - பழனி ரோட்டில் சௌந்தராபுரத்திற்கு அங்கன்வாடிக்கு முன்னால் இருந்து டியூக் இருசக்கர வாகனத்தை மணி (எ) மணிகண்டன் பகல் 11.15 மணிக்கு ஆஜல் செய்தார். அதை ஆய்வாளர் மகஜர் தயாரித்து கைப்பற்றினார். அந்த மகஜரில் நானும், என் உதவியாளரும் கையொப்பம் செய்தோம். அந்த டியூக் வண்டி நீதிமன்றத்திலுள்ளதாகும். அது சா.பொ.7. எதிரி மணி (எ) மணிகண்டன் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.15. கைப்பற்றதல் மகஜர் அ.சா.ஆ.16.

பின்னர் பள்ளப்பட்டி - பழனி ரோட்டில் பாப்பநாயக்கன்பட்டி பிரிவுக்கு வடக்கே பாறை அருகிலிருந்த முட்புதரிலிருந்து கோகுல் எடுத்து ஆஜர் செய்த சட்டையும், பேண்ட்டையும் 12.00 மணிக்கு ஆய்வாளர் மகஜரில் கைப்பற்றினார். அதில் நாங்கள் கையெழுத்து செய்தோம். அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.17. எதிரி கோகுல் (எ) கோகுலகிருஷ்ணன் ஆஜர் செய்த பேண்ட் நீதிமன்றத்தில் உள்ளது. அது சா.பொ.8. சட்டை நீதிமன்றத்தில் உள்ளது. அது சா.பொ.9.

பின்னர் அதே இடத்திலிருந்து பாண்டி (எ) துரைப்பாண்டி மறைத்து வைத்திருந்த பேண்ட் மற்றும் சட்டையை எடுத்து ஆஜர் செய்ததை, 12.30 மணிக்கு ஆய்வாளர் மகஜரில் கைப்பற்றினார். அதில் நாங்கள் கையெழுத்து செய்தோம். அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.18. எதிரி பாண்டி (எ) துரைப்பாண்டி ஆஜர் செய்த சட்டை நீதிமன்றத்தில் உள்ளது. அது சா.பொ.10. பேண்ட் நீதிமன்றத்தில் உள்ளது. அது சா.பொ.11.

இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**1** மற்றும் **4** ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

காவல்துறையினர் அயல்பணிக்கு அழைக்கும்போது வட்டாட்சியர் எழுத்து மூலமாக அனுமதி பெறவேண்டும். அன்றைய தினம் வட்டாட்சியருக்கு தகவல் தெரிவித்துவிட்டு காவல்நிலையம் சென்றேன். காவல்நிலையத்திற்கு நான் செல்வதற்கு முன்பு எதிரிகள் எவ்வளவு நேரமாக அங்கிருக்கின்றனர் என்று எனக்கு தெரியாது. அ.சா.ஆ.11, 13, 15 ஆகியவற்றில் எதிரிகள் ஒப்படைத்த சான்றுபொருட்கள் எந்த இடத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்தன என்ற விவரம் கூறப்படவில்லை. ஒப்புதல் வாக்குமூலம் பெறுவதற்கு காலதாமதமாகிவிட்டதால், மறுநாள் சொத்துக்கள் கைப்பற்றப்பட்டது. நான் அன்றைய தினம் கிராம நிர்வாக அலுவலர் குடியிருப்புக்கு

சென்றுவிட்டு, மறுநாள் காலை 6.00 மணிக்கு காவல்நிலையத்திற்கு வந்தேன். கரூர் நகர காவல்நிலையத்திலிருந்து, சான்றுபொருட்கள் கைப்பற்றப்பட்ட வேலமரத்திற்கு 40 நிமிடத்தில் சென்றோம். நான் முதல்நாள் இரவு வீட்டிற்கு செல்லும்போது எத்தனை மணி இருக்கும் என்றால் ஞாபகமில்லை. வேலமரம் ரோட்டை ஒட்டி திறந்தவெளியில் உள்ளது. எதிரிகளின் வாக்குமூலங்களின்படி பொருட்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றும், ஆய்வாளர் அறிவுரையின்படி தயார் செய்யப்பட்ட பொருட்கள் என் முன்னிலையில் கைப்பற்றப்பட்டது என்றால் சரியல்ல. வழக்குச்சொத்துக்களுக்கும், எதிரிகளுக்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. நான் இவ்வழக்கிற்காக ஜோடிக்கப்பட்ட சாட்சி என்றால் சரியல்ல.

<u>**2, 6, 8, 9** மற்றும் **12** ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

சௌந்தராபுரம் கிராமத்திற்குள் அங்கன்வாடி உள்ளது. சௌந்தராபுரத்தில் எத்தனை தெருக்கள் உள்ளன என்று எனக்கு தெரியாது. அங்கன்வாடி சௌந்தராபுரம் கிராமத்தில் ரோட்டின் மேலே உள்ளது. அங்கன்வாடி என்று பெயர் எழுதியிருந்தது. நான் சென்றபோது எந்த திசையில் இருந்தது என்று எனக்கு ஞாபகமில்லை. நான் சொன்னபடி சௌந்தராபுரம் கிராமத்திற்கு செல்லவில்லை என்றும், அங்கு வைத்து சா.பொ.7 கைப்பற்றவில்லை என்றும், அதனால்தான் சௌந்தாபுரத்தில் அங்கன்வாடி அமைந்துள்ள திசை பற்றி ஞாபகமில்லை என்று சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. பள்ளப்பட்டியிலிருந்து 1 கி.மீ. தூரத்தில் அண்ணாநகரில் அங்கன்வாடி உள்ளது என்றும், அதிலிருந்து 2 கி.மீ. தூரத்தில் சௌந்தராபுரம் உள்ளத என்றும் சொன்னால் சரியல்ல. எங்கள் முன்னிலையில் எதிரிகள் யாரும் ஒப்புதல்வ வாக்குமூலங்கள் எதுவும் அளிக்கவில்லை என்றும், அதன் அடிப்படையில் சான்றுபொருட்கள் எதுவும் கைப்பற்றவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

<u>மற்ற எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இல்லை என கற்றறிந்த வழக்கறிஞர்கள் தெரிவித்தார்கள்.

ஒம்/.ஆர்.சுண்முகசுந்தரம்,
மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | | | |
|---|---|---|---|---|
| Sessions Case No. | : | 17/2021 | | |
| | : | Prosecution | - | **PW-19** |
| Deposition of witness for | : | Defense | | |

| | | | |
|---|---|---|---|
| Name | : கார்த்திக் | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1872 of the 01st day of August 2023.

**(**குற்ற இறுதியறிக்கையில் உள்ள வரிசைப்படி எதிரிகள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளனர்**. 1** ம் எதிரி கோகுலகிருஷ்ணன் **(**எ**)** கோகுல்**, 2** ம் எதிரி துரைப்பாண்டி **(**எ**)** பாண்டி**, 4** ம் எதிரி மணிகண்டன் **(**எ**) R.S.**மணி**, 5** ம் எதிரி ரமேஷ் **(**எ**)** காவியாரமேஷ்**, 6** ம் எதிரி கேசவன்**, 7** ம் எதிரி அரவிந்த்குமார் **(**எ**)** அரவிந்த்**, 8** ம் எதிரி தமிழரசன்**, 9** ம் எதிரி அஜீத்**, 10** ம் எதிரி செந்தில் **(**எ**)** செந்தில்ஈஸ்வரன்**, 11** ம் எதிரி கலைச்செல்வன்**, 12** ம் எதிரி விமல் பஷீர் ஆகியோர் முன்னிலையாகியுள்ளனர்**. 3** ம் எதிரி இவ்வழக்கிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு**,** அவருக்கு எதிரான சிறப்பு வழக்கு **SPL.SC. 11/2023** நிலுவையில் இருந்து வருகிறது**)**

முதல் விசாரணை

நான் விஸ்வநாதபுரியில் வசித்து வந்து, பைனான்சில் வேலை பார்த்து வருகிறேன். இவ்வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது.

மேற்சொன்ன சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதியின் பேரில் குறுக்கு விசாரணை

நான் கடந்த 18.10.2020 அன்று காலை 9.00 மணிக்கு எனது இருசக்கர வாகனத்தில்

பள்ளப்பட்டி சௌந்தராபுரத்தில் ஊருக்கு வருவதற்காக நின்றுக்கொண்டிருந்தபோது, நான் நின்ற இடத்தில் TN 63 AW 6699 என்ற யானை கலர் வெர்னா காரில் எனக்கு ஏற்கனவே தெரிந்த எதிரிகள் தமிழரசன், அஜீத், கலைச்செல்வன், செந்திலீஸ்வரன், அரவிந்த்குமார் ஆகியோர் இறங்கி நின்றார்கள் என்றும், கோகுலகிருஷ்ணன், துரைப்பாண்டி, மணிகண்டன் ஆகிய மூவரும் வெள்ளை கலர் டியூக் வண்டியிலும், தேவக்கோட்டையை சேர்ந்த எதிரி பிரேம்குமார் TN 38 AE 4282 என்ற வண்டியில் வேகமாக வந்து இறங்கினார் என்றும், அதில் கோகுலகிருஷ்ணன் பேண்ட்டில் இரத்தக்கறை இருந்தது என்றும், அவர்களுக்குள் பரபரப்பாக பேசிக்கொண்டு, பிரேம்குமார் வந்த வண்டியை தமிழரசன் வீட்டில் போட்டுவிட்டு, மணிகண்டன் ஓட்டி வந்த டியூக் வண்டியை சௌந்தராபுரம் அங்கன்வாடி பின்புறம் நிறுத்திவிட்டு, பிரேம்குமாரை வெர்னா காரை ஓட்ட, அதில் கோகுல், துரைப்பாண்டி, மணிகண்டன் ஆகியோர் ஏறிக்கொண்டு, பள்ளப்பட்டி ரோட்டில் சென்றார்கள், தமிழரசன், அஜீத், செந்திலீஸ்வரன் ஆகியோர் பஸ்டாப்பை நோக்கி சென்றார்கள் என்றும், போலீசார் விசாரணையில் சொன்னேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் தமிழர் மக்கள் முன்னேற்ற கழகத்தில் பரமத்தி ஒன்றிய செயலாளராக இருந்து வந்தேன். எதிரி கோகுல் (எ) கோகுலகிருஷ்ணன் அதே அமைப்பை சேர்ந்தவர் என்பதால் அவரை காப்பாற்றுவதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை</u>

இல்லை என கற்றறிந்த வழக்கறிஞர்கள் தெரிவித்தார்கள்.

ஒம்/.ஆர்.சுண்முகசுந்தரம்,
மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.